விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மார்கழி 26 ஐ. ஆங் பிறை 23 இதழ்: 260

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10-1-1991


யுத்த நிறுத்தத்தை மீற

## அரச தரப்பில் முயற்சி; வெளிநாட்டு ராஜதந்திரிகள் அதிர்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் தற்போதைய யுத்த நிறுத்த சூழ்நிலையை குழப்பும் விதத்தில் கொழும்பில் அரசதரப்பில் முயற்சிக்கப்படுவது குறித்து வெளிநாட்டு ராஜதந்திரிகள் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படாது போகுமானல் இலங்கையின் எதிர்காலம் பெரும் சிக்கல் நிறைந்ததாக மாறுமென்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்

சம்பந்தப்பட்டவர்கள் இந்த யுத்த நிறுத்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடிக்க முயல வேண்டுமென்றும் இவர்கள் கூறியுள்ளனர். [சி]

இந்திய மத்திய அரசு—

## குற்றச்சாட்டுக்கு புலிகள் மறுப்பு

[யாழ்ப்பாணம்]

அசாம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும், ஆந்திர பிரதேசத்து நக்ஸலைட் தீவிரவாதிகளுக்கும் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு இருப்பதாக இந்திய மத்திய அரசு நேற்று முன்தினம் தெரிவித்த குற்றச்

(4-ம் பக்கம் பார்க்க)

பேச்சுவார்த்தை:

# முன்நிபந்தனைகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது

## விடுதலை புலிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு சிறிலங்கா அரசு முன்நிபந்தனைகளை விதித்துள்ளது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. பேச்சுவார்த்தைக்கு எவ்வித முன்நிபந்தனைகளையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. நிபந்தனையற்ற பேச்சுக்களையே நாம் விரும்புகிறோம்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் போர்நிறுத்தத்தை மீறிவருவதாக சிறிலங்கா அரசு முன்வைத்துள்ள குற்றச்சாட்டை நாம் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம். சென்றமாதம் 31ந் திகதி நள்ளிரவிலிருந்து எமது இயக்கம்

(4-ம் பக்கம் பார்க்க)

உயிருடன்

## தமிழர் டயர் போட்டு எரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு குமணதீவுப் பகுதியில் இலங்கை அரச படையினர் ஜனமுத்து மகாலிங்கம் [வயது 35] என்பவரை உயிருடன் டயர் போட்டு எரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் கடந்த 7-ம் திகதி நடைபெற்றது (க-வி]

## "அஸாம் தீவிரவாதிகளுடன் புலிகள் தொடர்பு வெறும் கட்டுக் கதை"

\- கருணாநிதி

(சென்னை)

"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அஸாம் அல்பா தீவிரவாதிகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவது வெறும் கட்டுக்கதையாகும்."

தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி சென்னையில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும், அஸாம் தீவிரவாதிகளுக்கும்

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் 1000 படையினர்

(கொழும்பு)

மன்னாரில் 1000 இராணுவத்தினர் தங்கியுள்ளதாக அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

படையினருக்கு உதவியாக 300 ஊர்காவற் படையினரும் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

பூநகரியில் தங்கிய

## 1000 கொழும்பு பயணிகள் நேற்றிரவு புறப்பட்டனர்

(பூநகரி)

வவுனியா இராணுவதலைமுகாமில் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புறப்பட்ட பயணிகளில் சுமார் 1000பேர் பூநகரியில் தங்கியுள்ளார்கள். வவுனியா நகருக்கு வெளியிலும் பல பயணிகள் தங்கியுள்ளார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்று சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா யுத்த நிறுத்தம் தொடர்பாக அரசியல் கட்சித் தலைவர்களை இன்று பிற்பகல் சந்திப்பார். (க)

## 7 பஸ்களில் பயணிகள்

(வவுனியா)

வவுனியாவில் தங்கியிருந்த பயணிகள், 7 இ.போ.ச. பஸ்

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரில் 50 பேர் காணமல்போயுள்ளார்கள்

(வவுனியா)

வவுனியா நகரில் ஆண்கள், பெண்கள் வயது வித்தியாசமின்றிக் காணமற்போவது அதிகரித்து வருகின்றது. கடந்த மாதம் வரையில் 50 பேர் வரையில் வவுனியா நகரில் காணமற்போயுள்ளனரென்று கூறப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்படுபவர்களுக்கே இந்தக்கதி நேர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (153)

கொழும்பு பயணிகள் —

## வவுனியாவில் படையினரிடம் 'பாஸ்' பெறவேண்டும்

(வவுனியா)

வடபகுதியிலிருந்து கொழும்புக்குச் செல்வோர் வவுனியாவில் இராணுவத்தினரிடமிருந்து 'பாஸ்' பெற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறார்களாம்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இராணுவத்தினர் இதற்கென 'பாஸ்'களை வழங்கி வருகிறார்களாம்.

இவ்வாறு இராணுவத்தினர் 'பாஸ்'களை வழங்கும் போது பல விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் சந்தேகப்படுவோர் தடுத்து வைக்கப்படுகிறார்களாம். (சி)

## கோவளம் கடலில் கரையொதுங்கிய சடலம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கோவளம் வெளிச்சவீடு கடற்பகுதியில் நேற்று அதிகாலையில் ஓர் ஆணின் சடலம் கரையொதுங்கியது.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க கறுப்பு நிறமுடைய இச் சடலம் பழுதடைந்த நிலையில் கரையொதுங்கியது. நேற்று முன்தினம் மாதகல்

(4-ம் பக்கம் பார்க்க)

## சீ-நோர் ஊழியருக்கு 5 மாதம் சம்பளமில்லை

(சித்தன்கேணி)

சீ-நோர் நிறுவன ஊழியர்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாக வேதனம் வழங்கப்படவில்லை. இதனால் ஊழியர்கள்

[4-ம் பக்கம் பார்க்க]

## சிறி விளம்பரம்

### பயிற்சி

றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங், றீ வைண்டிங், வயறிங் Computer Programming, Spoken English பயிற்சிகள் செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பம் 10-1-91, Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (எ-971)

### தேவை

குரக்கன், சோயா, சோளம் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்: அண்ணா பாம், இணுவில். (ஏ-975)

இலுப்பை பிண்ணாக்கு (அரைப்பு) தேவைப்படுகிறது, மில்க்வைற் - யாழ்ப்பாணம். (எ-979)

மூளாய் பாலர் பாடசாலை பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற பாலர் ஆசிரியர், வேலணை மேற்கில் கல்வி பயிற்றுவிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தொடர்பு: க. இளங்கோவன் வேலணை மேற்கு, வேலணை-6. (சி 4250)

### விற்பனைக்கு

நீம் சுகாதார தூபம் பாவித்து நுளம்புத் தொல்லையிலிருந்து விடுதலை பெறுங்கள். ஒலிவ் ஸ்நானப்பவுடர் எண்ணெய்த் தோய்ச்சலுக்கு முந்தையோர் கண்ட முறையில் தயாரானது. பக்கெற் ஒன்று ரூ. 1.25, 25 பக்கெட் கொண்ட காட் ரூ. 25,00 மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ-978)

### ஆங்கிலவகுப்புகள்

கொழும்பு, வத்தளை, குருநாகல், மட்டுநகர் பிரபல ஆசிரியர் மேரி ஆனந்தன் மூன்று பாடநெறிகளை உடன் ஆரம்பிக்கிறார். By - pass to Mastery of English Part II, Spoken English with Lingual Training, G. C. E. O/L & A/L வினாவிடை. மாணவர் தொடர்பு: 10ம் திகதிக்குமுன் ஞானபண்டித வைத்தியசாலை குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். (சி-4242)

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி வடக்கு முத்துத்தம்பி பாடசாலைக்கு அண்மையில் 4½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு சி. அரிச்சந்திரன், அரசடி லேன், தாவடி வடக்கு கொக்குவில். (சி-4246)

## இடமாற்றம்

(நாவற்குழி)

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய திரு. ரீ. முத்துக்குமாரசாமி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபராகவும். கோப்பாய் கொத்தணி அதிபராகவும் இடமாற்றம் பெற்றுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்

(நல்லூர்)

இதுவரை காலமும்கொழும்பில் நடைபெற்ற ஆசிரிய கலாசாலை நேர்முகப்பரீட்சை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர்களின் முயற்சியாலும். யாழ்ப்பாணக்கல்விப்பணிப்பாளரின் அனுசரணையாலும் இப்பரீட்சை இங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞானம், கணிதம், விவசாயம், ரோமன் கத்தோலிக்கம் திருநெல்வேலியிலுள்ள பலாலி ஆசிரிய கலாசாலையிலும், ஆரம்பக்கல்வி, மனையியல், சங்கீதம், நடனம், சித்திரம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும் நிகழும்.

இதற்குரிய ஆவணங்கள் யாவும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாண கல்விப்பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (152)

## நினைவஞ்சலி

(மானிப்பாய்)

வீரவேங்கை அமலனின் 45-வது நாள் நினைவஞ்சலி அண்மையில் ஆனைக்கோட்டையில் அனுஷ்டிக்கப்பட்டது.

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள்

[உடுவில்]

ஏழாலை,வசாவிளான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் தற்காலிகமாக இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைகளில் கடமைபுரிந்தால் அவர்கள் இதுவரை பெற்ற லீவுகளை முன்னைய பாடசாலை அதிபர்கள் மூலம் பெற்றுத் தற்காலிக பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்கவேண்டுமென மருதனாமடம் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரன் அறிவித்துள்ளார். (109)

## போரூட் பிரதிநிதிகள் வருகிறார்கள்

(சித்தன்கேணி)

போரூட் நிறுவன பிரதிநிதிகள் குழுவினர் யாழ். மாவட்டத்திலுள்ள நிலைமைகளை நேரில் ஆராய நாளை வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து வருகின்றனர்.

போரூட் நிறுவனத்தின் வதிவிட பிரதிநிதி, திட்ட இயக்குநர், திட்ட பணிப்பாளர் ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுவர்.

## நொதேண்

(சுண்டிக்குளி)

O/L Day Class

ஆரம்பம்: 16-01-91

ஆண்டு 6 தொடக்கம்

ஆண்டு 11 வரைக்குமான வகுப்புகள்

ஆரம்பம் 12-01-91

(சி 4251)

## இராசி பலன்

10-01-1991

வியாழக்கிழமை

தசமி மாலை 4-48 வரை: நாள் முழுவதும் விசாகம் சித்தயோகம், இராகுகாலம், பகல் 2-03 முதல் 3-29 வரை. நல்ல நேரம் காலை 9-04 முதல் 10-34 வரை.

மேடம்:- மறைமுக எதிர்ப்பு, வேண்டியவை தடைப்படல், அவமதிப்பு, குடும்பக்கவலை, போராட்டம்.

இடபம்:- நல்லோர் சந்திப்பு, மனத்திடம், தொழில் பாராட்டு, குடும்பச் சந்தோசம்.

மிதுனம்:- காரிய வெற்றி, பயணங்களால் நன்மை' பெரியோர் ஆசி, வீட்டிம் சுபகாரியம், புகழ்.

கடகம்:- மனக்குறை, குடும்பக் கஷ்டம், வேலைப் பழு, புதிய உறவு, தொழில் போட்டி.

சிங்கம்:- தடுமாற்றம், வீண் பயம், பழையபிரச்சனை, குடும்பத்தில் சச்சரவு, தூரப் பயணம்.

கன்னி:- புதிய ஸ்தானம், குடும்ப மகிழ்ச்சி, தொழில் லாபம், காரிய வெற்றி, அனாவசியச் செலவு.

துலாம்:- மனப் போராட்டம், அதிகாரிகளால் துன்பம், குடும்பத்தில் குழப்பம், உடல் சோர்வு.

விருச்சிகம்:- புதிய முதலீடு, தொழில் லாபம், குடும்ப மகிழ்ச்சி, இனசன வரவு, ஆலய தரிசனம்.

தனுசு:- தெய்வீகச் செலவு, குடும்பச் சந்தோசம், நரம்புப் பலவீனம், தொழில் பாதிப்பு, கவலை.

மகரம்:- குடும்பத்தில் சந்தோசம், விருந்துபசாரம் நண்பர்கள் உதவி, எதிர்பாராத பயணம்.

கும்பம்:- குடும்ப நன்மை. வைத்தியச் செலவு, அதிகாரம், பெரியோர் பகை' காரிய தாமதம்.

மீனம்:- தயாள சிந்தை. கல்வியால் பெருமை, குடும்பச் செலவு, புத்திரர் கவலை, காரியத் தடை.

'ஜோஸ்யர்'

## மா விலை குறைக்கப்பட்டது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா அரசினால் கோதுமை மாவின் விலை நேற்று நள்ளிரவு முதல் ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டது.

இதன்படி ஒரு கிலோ மாவின் புதியவிலை ரூபா 12-45 ஆகவும் ஒரு றாத்தல் பாணின் விலை ரூபா 4-50 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (க)

## வளைகுடா பிரச்சனை: ஜெனிவாவில் பேச்சு ஆரம்பம்

(ஜெனிவா)

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு ஜேம்ஸ் பேக்கரும், ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் திரு தாலிக் அஸிசும் நேற்று அதி முக்கியத்துவம் வாய்ந்த வளைகுடா சம்பந்தமான பேச்சுக்களை ஜெனிவாவில் ஆரம்பித்தனர்.

ஈராக் குவைத்திலிருந்து வெளியேற ஐ. நா வதித்த காலக்கெடு முடிய இன்னும் ஆறுநாட்களே உள்ள நிலையில் மேற்படி பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளது. (க)

## குமணா கப்பல் நேற்று வந்தது

(யாழ்ப்பாணம்)

குமணகப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு உணவுப் பொருட்கள் மற்றும் வங்கிகளுக்கான பணத்துடன் வந்தடைந்துள்ளது. (153)

## உணவு முத்திரை தட்டுப்பாடு

(பூநகரி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாணவருக்கான மதிய உணவு முத்திரைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.(23)

## ,லோசனைக் கூட்டம்

(அராலி)

இலங்கை திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தின் கல்வி ஆண்டுக்கான கற்கை நெறிகளுக்குத் தம்மைப் பதிவு செய்துகொள்வதற்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பிராந்திய நிலயத்தில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

## மகாபொல கொடுப்பனவு 89|90

### 1-ம், 2-ம் தவணைப் பணங்கள் நவம்பர், டிசெம்பர் - 90

பின்வரும் மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுக்குரிய ஒழுங்குகள் கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்பட்டுள்ளது.

(I) கலைப்பீடம்

| | |
|---|---|
| 1ம் வருட மாணவர்கள் | |
| கலைப்பிரிவு | 09-01-91—9.00-12.00 |
| வர்த்தகப் பிரிவு | |
| வியாபார நிர்வாகப்பிரிவு | |
| 2ம்,3ம்,4ம் வருட மாணவர்கள் | 15-01-91—1.30-2.30 |
| (பிந்திப் பதிவு செய்தவர்கள்) | |
| கலைப்பிரிவு | |
| வர்த்தகப் பிரிவு | 16-01-91—9.00-12.00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | |

(II) விஞ்ஞான பீடம்/மருத்துவ பீடம்

| | |
|---|---|
| 1ம் வருட மாணவர்கள் | |
| பௌதீக விஞ்ஞானம் | 09-01-91—1.30-2.30 |
| உயிரியல் விஞ்ஞானம் | |
| மருத்துவ பீடம் | |
| 2-ம், 3ம், 4ம் வருட | 15-01-91—9.00-12.00 |
| விஞ்ஞானபீட மாணவர்கள் | |
| (பிந்திப் பதிவு செய்தவர்கள்) | 16-01-91— 1.30-2.30 |
| பௌதீக விஞ்ஞானம் | |
| உயிரியல் விஞ்ஞானம் | |

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்படவேண்டியவை:

I. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை

II மாணவர் பதிவுப் புத்தகம்.

III. ரூபா 2/- பெறுமதியான முத்திரை-

(ஏ-977) பதிவாளர்.

## தாழியை உடைப்பது விவேகமற்றது

வெண்ணெய் திரளும்போது தாழியை உடைப்பது விவேகம் அற்றது! வெண்ணை எடுக்கும் வெறும் தாழியையே உடைக்க கங்கணம் கட்டி நிற்பது அதைவிட அர்த்தமற்றது!

''தமிழர் பிரச்சனைத் தீர்வு'' என்ற வெண்ணெய்யைத் திரளவைக்க உதவும் யுத்தநிறுத்தம் என்ற தாழியை கட்டிக் காக்க வேண்டிய பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவே அதனை எப்படியும் உடைத்துவிடவேண்டும் என்று அடம்பிடித்து நிற்பது போல அவரது அதிக பிரசங்கித்தனங்கள் அமைந்துவிளவ!

''சுயநிர்ணய உரிமை என்ற சொல்லுக்கே இடமில்லை'' ஒருதலைப் பட்ச யுத்தநிறுத்தம் சரணடையும் ஒரு நடவடிக்கை என்று ரஞ்சன் தன்மனம் போனபடி கனல் கக்கும் வார்த்தையாடல் என்ற 'சமர்' புரிந்து வருகின்றார்.

வடக்கு-கிழக்கில் அரசபடையினர் அடுத்தடுத்து யுத்தமீறல்கள் செய்துள்ளதுடன், ஆறு புலிகளைச் சுட்டுக்கொன்றுள்ளபோதிலும் இதுவரையில் விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை முறையாகக் கடைப்பிடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அரச தரப்பின் முக்கிய பேச்சாளரான அமைச்சர் ரஞ்சனின் காலநேரம் கெட்ட கருத்துரைகளை நோக்கும்போது, நெருக்கடி மிகுந்த அரசியல் சதுரங்க ஆட்டத்தில் ''யுத்த நிறுத்தம்'' குறித்த அடுத்த காயை நகர்த்தும் தனிப்பொறுப்பு தமது தலையில் வீழ்ந்து விட்ட சங்கடத்தில் அரசு என்ன செய்வது எப்படிச் செய்வது என்ற திரிசங்கு நிலையில் தத்தளிப்பதுபோல் உள்ளது!

இன்று வியாழன் நள்ளிரவுடன், வாராந்த யுத்த நிறுத்தம் காலவதியாகி காலதேவனின் கர்ணகடூரப் பணி தொடங்க விடுவதா? இல்லையா? என்ற கேள்விக்கு அரசு பதிலளித்தாக வேண்டும்!

எனவே மாலை 5 மணிக்கு கூடும் அனைத்துக் கட்சி மாநாட்டில் வெண்ணெய் திரளவேண்டும் என்ற நல்லெண்ணம் இருந்தால் முதலில் தாழியையாவது உடைத்துவிடாமல் கட்டிக் காக்கும் நல்லதொரு முடிவை எடுக்க ஆட்சியாளர்க்கு இறைவன் ஞான ஒளியை அருளட்டும்!

— மயூரன்

### இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட

# தீவுப்பகுதியின் அபிவிருத்திக்கு உதவ சகலரும் முன்வர வேண்டும்''

இயற்கையால் வஞ்சிக்கப்பட்டதும் தனிமைப்பட்டதும் கடலால் சூழப்பட்டதுமான தீவுப்பகுதிகள் அரசபடைகள் கட்டவிழ்த்துவிட்ட அராஜக நடவடிக்கைகளால் சிதைந்து சின்னபின்னமாகி துயரத்தில் மூழ்கியுள்ளன.

கலை, கலாச்சாரம், நாகரீகம், பண்பாடு, அரசியல் முதலியவற்றிலும் வீரம் செறிந்த போராட்டத்திலும் சாலைகள், வீடுகள், வைத்திய சாலைகள், கடைகள் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் அனைத்தையுமே நாசம் செய்தனர். இதன் உச்சக்கட்ட நிகழ்வு மண்டைதீவில் நடந்து முடிந்தது. இன்று இந்த மண்டைதீவு மயான பூமியாக காட்சி தருகிறது.

காலத்திற்கு காலம் ஏற்படும் இராணுவ அனர்த்தங்களால் தீவுப்பகுதிக்கான கவனத்தை இங்கே செலுத்த வேண்டும்.

தீவுப்பிரதேச அபிவிருத்தியிலும் மேம்பாட்டிலும் பல நாடுகளிலும் பிரதேசங்களிலும் வாழுகின்ற தீவகமக்களும் பொருள் படைத்தோரும் பெரிதும் அக்கறை காட்ட வேண்டும். முற்றிலும் முழுதான கடற்பிரதேசமான தீவகத்தில் யாழ் பல்கலைக் கழகத்தின் மீன்பிடித்துறை சார்ந்த பீடம் ஒன்றையும் அமைக்க ஆவண செய்யப்பட வேண்டும்; தீவகத்தின் துயர் துடைக்கப்படவேண்டும்.

(83)

நமது நிருபர்

**கே. வி. கே. திருலோகமூர்த்தி**

மற்றய பகுதி மக்களுக்கு சளைத்தவர்களல்ல இந்த தீவக மக்கள். இந்த மக்களை படையினர் கொன்று குவித்தனர். விமானங்கள் கொண்டு தாக்கி அழித்தனர்.

இப்பிரதேசத்திற்கான போக்குவரத்தை சிதைத்தனர். ஆலயங்கள் பாடசாலைகள், ...

போக்குவரவு அடிக்கடி தடைப்படுவதும் குறிப்பாக பண்ணைவீதி போக்குவரத்து தடைப்படுவதும் சாதாரண நிகழ்வாகும்.

பல இடர்களின் மத்தியில் வாழும் இந்த மக்களின் போக்குவரத்து தங்குதடையின்றி நடைபெற ஆவண செய்யப்பட வேண்டும். இப்பகுதியில் மருத்துவ சேவையும் இன்று சீர்குலைந்து இருக்கிறது. மருந்துவகைகளுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இப்பகுதி வைத்தியசாலைகள் சிறப்பாக இயங்க அரசுசார்பற்ற நிறுவனங்கள் தனிக்

3 லட்சம் பேர்

## வெளியேறுவது கஷ்டமாகும்

(கொழும்பு)

மத்திய கிழக்கில் போர் அபாயம் ஏற்பட்டுவருவதால் சவூதி அரேபியாவில் வேலை பார்க்கும் மூன்றுலட்சம் இலங்கையர்களை அங்கிருந்து வெளியேற்றுவது கஷ்டமான காரியமென இலங்கை தொழில் துறை பயிற்சி அமைச்சர் ஆர் பிரேமசந்திரா அறிவித்துள்ளார். (எஸ்)

## பொங்கலுக்கு முன் நிவாரணம்

(சித்தன்கேணி)

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருப்போருக்கு 6ம் கட்ட நிவாரணத்தையும் தைப்பொங்கல் தினத்துக்கு முன்பு வழங்குமாறு ப. நோ. கூ. ச. சமாஜத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(137)

## என்ன சங்கதி?

மண்ணெண்ணை வாங்க நேற்றுமுன்தினம் புறப்பட்டேன். வழியில் ஒரு சிறியகடை. விலையைக்கேட்டேன். போத்தல் 32 ருபா என்றார்.

இன்னும் மலிவாக வாங்கலாம் என நினைத்து முத்திரைச் சந்தைக்குப் போனேன். அங்கு விலையைக் கேட்டதும் அதிர்ந்து விட்டேன். போத்தல் 45 ருபா. மீண்டும் அந்த சிறிய கடைக்கு திரும்பிவந்தேன். அங்கு எல்லாம் முடிந்து விட்டது.

இப்போ பொருள்கள் பெறுவது கஷ்டட. ஓரளவு நியாயமானவிலை என்று தோன்றினால் வாங்கி விடுவது நல்லது. கொஞ்சம் வாங்கலாம். பின்மறுநாள் மேலும் விலை குறைந்தால் மிச்சத்தை வாங்கலாம்.

மலியும், பழையவிலைக்கு வரும் என்று காத்திருந்தால் ஏமாற்றத்தில்தான் முடியும். பெரிய கடைகளில் இருந்துதான் சிறிய வியாபாரிகள் பொருட்களை கொள்முதல் செய்கிறார்கள்.

பெரிய கடைகளில் 100 வில்லைகள் கொண்ட ஒருபனடோல்பெட்டி 65 ருபா தான். அங்கு 10 வில்லைகள் கொண்ட ஒரு பனடோல் சீற் 7 ருபாதான், ஆனால் சிறிய கடைகளில் ஒரு பனடோல் வில்லை ஒருருபா. இப்படித்தான் மற்றய பொருட்களும்: இதனால் பாதிக்கப்படுவது முழுக்க முழுக்க பாவனையாளர்கள்தான்!

'ஊரோடி'

## தமிழீழம் அமைப்பதே எமது முக்கிய குறிக்கோள்

### பாப்பா உரை

(நாவற்குழி)

''இன்று பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.. ஆனால் தமிழனுக்கென்றொருநாடில்லை அதனால் எமது தலைவர் வழியில் நின்று போராடி நாம் தமிழனுக்கு என்றொரு தமிழீம் அமைத்தே தீருவோம் எமது தலைவனைப் போல் ஒரு தலைவர் தங்களுக்கும் கிடைக்கமாட்டாரா என பல நாட்டிலுள்ளவர்கள் கவலையடைகிறார்கள்.''

இவ்வாறு தென்மராட்சி அரசியல்பொறுப்பாளர் திரு கே. பாப்பா இபற்றாலையில் நடைபெற்ற வீரவேங்கை வோடரின் முதலாம் ஆண்டு அஞ்சலிக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு நாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பாப்பா தொடர்ந்து பேசுகையில், தமிழீழம் பெற்றுத் தருவோம் எனக்கூறி பல இயக்கங்கள் வந்தன. பல தலைவர்கள் வந்தார்கள். ஆனால் அவர்கள் இன்று தமிழ் மக்களைக்கொன்று குவிப்பதில் தமிழர்களுக்கு எதிராக துப்பாக்கி எடுத்துள்ளதை நீங்களறிவீர்கள்.

எமது போராட்டத்தின் அடித்தளத்தை இளைஞர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய இளைஞர்கள் தினமும் நாம் செத்துவிடுவோம் செத்துவிடுவோம் என நினைத்து போராட்டத்திலிருந்து ஒதுங்கி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றுஎமது போராளிகள் தம் உயிரைத் துச்சமென மதித்து பல முகாம்களில் முன்னின்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். இதேவேளையில் எமது போராளிகள்சிந்துகின்றகுருதியிலே பல இளைஞர்கள், யுவதிகள் குளிர்காய்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்நிலைமாறி வீட்டுக்கொருவர் பங்குகொள்ளவேண்டும்.

தொடர்ந்து விடுதலைப்புலிகளின் கொடிகாமம் வட்டப்பொறுப்பாளர் திரு. இராகுலன்பேசுகையில்; பெண்கள் இன்று போராட்டத்திலே குதித்து, போர் முனையிலே நின்றுபோராட, நாங்களும் ஆண்கள்தான் எனக்கூறிக்கொண்டு பல இளைஞர்கள் வீதிகளில் உலாவருகிறார்கள். எமது பாரம்பரிய பிரதேசத்தை மீட்க விடுதலைப்புலிகள் இந்தப் போராட்டத்தை தொடங்கிபிராவிடில் இதுவரையில் நாமெல்லாம் எமது மண்ணை முற்றாக இழந்திருக்க வேண்டியநிலையும்ஏற்பட்டிருக்கும். ஆகையால் எமது சுதந்திரத்தமிழீழத்தை மீட்டெடுக்க எல்லோரும் போராட்டத்தில் இணையவேண்டும் என்றார்.

[107]

## பலதும் பத்தும்

### கடலுக்குள் பூகம்பம்

பூகம்பம் ஏற்படுவது பற்றி எல்லோருக்கும் தெரியும் ஆனால் கடலுக்கடியிலும் பூகம்பம் ஏற்படுவதை வாஷிங்டன் பல்கலைக்கழக புவியியல் ஆய்வாளர் பேராசிரியர் வியன்ஸ் கண்டுபிடித்துள்ளார். கடலுக்கடியில் ஏற்படும் பூகம்பங்களினால் அலைகள் நாற்பதடி உயரத்துக்கு நொடிப்பொழுதில் எழும்பி கலியுக காலத்தை ஏற்படுத்துகின்றன. 1283ம் ஆண்டு கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பங்களினால் ஜாவா, சுமத்திரா நாடுகளில் ஒருநிமிடத்தில் 30,000 மக்களைப் பலிகொண்டது. 1960ல் தென் பசுபிக்கடலில் ஏற்பட்ட பூகம்பத்தினால் பிலிப்பைன்ஸ், சிலி ஆகிய நாடுகளில் நொடிப்பொழுதில் 1000பேர் பலியானார்கள்.

'ஞாநி'

## வலைப்பாடு துறைமுக விஸ்தரிப்பு —
# கிளிநொச்சிக்கு உணவுப் பொருள் கொண்டுவருவதில் சிரமம் குறையும்

(கிளிநொச்சி)

பூநகரி வலைப்பாடு துறைமுகம் இறங்கு துறைமுகமாக விஸ்தரிக்க கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு உணவு மற்றும் பொருட்கள் கொண்டுவருவதில் உள்ள சிரமம் குறையும் எனவும் அரசஅதிபர் மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இரண்டரை லட்சம் ரூபா செலவில் இந்த துறைமுகம் ஆழமாக்கப்படும். பாதுகாப்புச் சபையும் இத்துறைமுகம் ஊடாக கப்பல்களை அனுப்ப அனுமதி வழங்கியுள்ளது.

பூநகரி பலநோக்கு கூட்டுறவு சங்கம் இதன் ஒப்பந்த வேலையை பொறுப்பேற்றுள்ளதாகவும் இத்துறைமுகம் ஊடாக கப்பல் போக்குவரவு மீன்பிடித்துறை முதலானவையும் வளர்ச்சியடையும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். [83]

## வவுனியா கடைகள் 5 மணிக்கு மூடப்படும்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் சகல வர்த்தக நிலையங்களும் மாலை 5 மணியுடன் மூடப்படவேண்டுமென பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவுநேற்றுமுதல் அமுலுக்கு வந்துள்ளது.

இராணுவத்தினரின் வசதி கருதியே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

தற்போது வவுனியாவில் நகரப் பகுதியிலும், பூந்தோட்டப்பகுதியிலும் படையினரின் கெடுபிடி அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## தினமும் 25 லொறிகளுக்கு அனுமதி

[பூநகரி]

வவுனியாவில் தங்கிநிற்கும் நூற்றுக்கு மேற்பட்ட லொறிகளில் தினமும்கொழும்புக்கு செல்ல 25 லொறிகளை மட்டும் இராணுவத்தினர் அனுமதிக்கின்றனர்.

## பஞ்சாப்பில்
## 12 இந்துக்கள் கொலை

(சண்டிகார்)

சீக்கிய தீவிரவாதிகள் 12 இந்துக்களை பஞ்சாப் ரயில் நிலையம்ஒன்றில் சுட்டுக்கொன்றுள்ளனர். [க]

## கோவளம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கடற்பகுதியில் காணமற்போன ஒருவரின் சடலமாக இது இருக்கலாமெனவும் கருதப்படுகின்றது.

அதிகாலை முதல் அடையாளம் காண்பதற்காகச் சடலம் வைக்கப்பட்டபோதும் எவரும் உரிமை கோராததால் மாலை 4 மணியளவில் காரைநகர் வட்ட அவையினர் சடலத்தை வெளிச்ச வீட்டுக்கு அருகில் புதைத்தனர். (சி)

## புகையிலைக்கு மருந்தடித்தவர் மயங்கி வீழ்ந்தார்

(புங்குடுதீவு)

புகையிலைக்கு மருந்து தெளித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் அறிவிழந்த நிலையில் மயக்கமுற்றுர்.

இச்சம்பவம் வேலணைப்பகுதியிலுள்ள புகையிலைத் தோட்டமொன்றில் நடந்துள்ளது.

அறிவு மயங்கிய வேலணையைச் சேர்ந்த மயூரன் [வயது 20] என்ற இளைஞருக்கு சிகிச்சை அளிப்பதற்காக வேலணை கிராமிய அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கான மருந்து வகைகள் இல்லாததினால் மயக்கமுற்ற நிலையில் உள்ள இளைஞரை இரவோடு இரவாக புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு சைக்கிளில் கொண்டுவரப்பட்டு உடனேயே சிகிச்சை அளிக்கப்பட்டது.

## நிதானமாகச் செல்படவேண்டும்

[புதுடில்லி]

இலங்கைப் பிரச்னையில் புதிய முயற்சியில் இந்தியா கவனமாகவும், நிதானத்துடனும் செயல்பட வேண்டும் என்று பாரதப் பிரதமர் திரு சந்திரசேகர் தெரிவித்திருக்கிறுர்.

## சீ-நோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகுந்த கஷ்டம்அடைகின்றனர்.

காரைநகர், குருநகர் ஆகிய இடங்களிலுள்ள சீ-நோர் நிறுவன ஊழியர்கள் சுமார் 200 பேருக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் தொடக்கம் இதுவரை வேதனம் எதுவும் வழங்கப்படவில்லை. (137)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை தங்கராசா
(கத்தர்மடம்)

இளைப்பாறிய சுங்க இலாகா உத்தியோகத்தரும், ஸ்ரீலங்கா புத்தகசாலையில் கடமையாற்றியவருமான செல்லத்துரை தங்கராசா அவர்கள் 09-01-1991 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற செல்லத்துரை சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், சிவஞான சரஸ்வதியின் அன்புக்கணவரும், கோசலா [ஆசிரியை புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்] அவர்களின் அன்புத்தந்தையும், தனபாலன் [ஆசிரியர் சென். பற்றிக்ஸ் கல்லூரி] அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மங்கையற்கரசி, அருட்பிரகாசம், கனகரட்ணம் (நவம்), காலஞ்சென்ற பதுமநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற க.செல்வரட்ணம், க. அரசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தனுசலா, சிவனுஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 10-01-1991 வியாழக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மு. தனபாலன்
இல. 12, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். [சி 4252]

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

# பேச்சுவார்த்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தம் பிரகடனம் செய்ததிலிருந்து சிறிலங்கா ஆயுதப் படைகளே போர் நிறுத்தத்தை தொடர்ச்சியாக மீறி வருவதுடன் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளன. புத்தாண்டு பிறந்ததிலிருந்து கடந்த 8 நாட்களில் மொத்தம் 39 போர் மீறல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஒருபுறம் போர் நிறுத்தத்தை மீறிக்கொண்டு மறுபுறம் பழியை எமது இயக்கம் மீது சுமத்திவிட அரசாங்கம் முனைகிறது. இதிலிருந்து தமிழீழத்தில் சமாதானத்தையும் சகஜ நிலையையும் உண்டுபண்ணுவதில் சிறிலங்கா அரசுக்கு உண்மையான ஆர்வமும் அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனையற்ற முறையில் காலவரையற்ற போர் நிறுத்தத்தை பிரகனப்படுத்தியதுடன் சமாதானப் பேச்சுகளுக்கு தயாரென அறிவித்தது. ஒரு தலைப்பட்சமான முறையில் நாம் பிரகடனம் செய்த போர்நிறுத்தத்தால் செய்வதறியாது தடுமாறிய சிறிலங்கா அரசு மூன்று நாட்கள் வரை ஆலோசித்துவிட்டு ஒரு பதிலறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையில் காலவரையற்ற எமது போர்நிறுத்தத்திற்குப் பதிலாக 7 நாள் காலவரம்பு விதித்து தாக்குதல் இடைநிறுத்த அறிவித்தல் ஒன்றை அரசு வெளியிட்டது. இந்த தற்காலிக தாக்குதல் இடைநிறுத்தத்திற்கு ஒரு தலைப்பட்சமான பல நிபந்தனைகளையும் விதித்துக்கொண்டது. இந்தக் கடும் நிபந்தனைகள் இருதரப்பினருக்குமிடையில் போர் நிறுத்தத்தை பேணுவதற்கு வழிகோலுவதாக அமையவில்லை. மாறாக, ஆயுதம் தரித்தோர் மீது தாக்குதலை மேற்கொள்ளும் உரிமை தேடுதல் வேட்டையைத் தொடரும் அதிகாரம் ஆகியன ஆயுதப்படைகளுக்கு உண்டென்று இந்த நிபந்தனைகள் வலியுறுத்துகின்றன. எனவே, அரசு தரப்பில் வெளியிடப்பட்ட பிரகடனம் உண்மையான போர் நிறுத்த அறிவித்தல் என்று சொல்ல முடியாது எந்த சந்தர்ப்பத்திலும் போர்நிறுத்த மீறல்களை செய்யும் வகையில் அரச படைகளுக்கு உரிமை வழங்கப்பட்டிருப்பது போல் இந்த நிபந்தனைகள் அமைந்திருக்கின்றன. இதன் காரணமாகவே அரச படைகள் பொறுப்பற்ற முறையில் போர் நிறுத்தத்தை மீறி வருகின்றன.

தமிழீழத்தில் சமாதானத்தையும் சகஜ நிலையையும் உருவாக்கி, சமரசப் பேச்சுக்கான தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதாயின் சிறிலங்கா அரசு காலவரையற்ற முழுமையான போர்நிறுத்தத்தைப் பிரகடனம் செய்வது அவசியம். அதேசமயம் ஆயுதப் படைகள் போர் நிறுத்தத்தை மீறாத வண்ணம் அரசு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். போர் நிறுத்த விதிகள், கட்டுப்பாடுகள் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசி, இணக்கம் காணப்படவேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்கனவே பிரகடனம் செய்தற்கு அமையத் தொடர்ந்து காலவரையறையற்ற போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும். சமாதானத்திற்கும் பேச்சுக்கள் வாயிலான அரசியல் தீர்வுக்கும் வழிகோலும் இந்த அரிய சந்தர்ப்பத்தை சிறிலங்கா அரசு அசட்டை செய்யமாட்டாது என நாம் நம்புகிறோம். (வி)

## பூநகரியில்

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

பூநகரியில் தங்கியபயணிகள் நேற்று மாலை தங்கள் பயணத்தை தொடர்ந்தார்கள். இன்று காலையும் தொடர்ந்து பயணத்தை மேற்கொள்வார்கள்.

## அசாம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இடையே தொடர்பு இருப்பதாக இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தெரிவித்த கருத்தை மறுத்தே தமிழக முதல்வர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், இலங்கைப் போராளிகள் தொடர்பாக மத்திய அரசின் அறிவுறுத்தலின் படியே தமிழக அரசு செயற்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தார். (க)

## இன்று 16-வது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

1974ம் ஆண்டு ஜனவரி 10ந் திகதி யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற 4-வது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியில் சிறிலங்கா பொலிசாரின் கெடுபிடியால் பதினொரு தமிழ்மக்கள் பலியானார்கள். இன்று 16வது வருட நினைவு தினமாகும். (153)

## 7 பஸ்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

இந்த பஸ்கள் யாழ்ப்பாணம் சென்று திரும்புவதற்கான டீசல் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சாட்டை விடுதலைப் புலிகள் தலைமைச் செயற்குழு முற்றாக மறுத்துள்ளது.

இது பற்றி மேலும் கூறப்படுவதாவது;

''தமிழீழ விடுதலைப்புலிகளைப் பற்றி தப்பான அபிப்பிராயத்தையும், அச்ச உணர்வுகளையும் இந்திய மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் தீயநோக்குடனே இந்திய மத்திய அரசு இந்தக் குற்றச்சாட்டை எம் மீது சுமத்தியது!

இத்தகைய குற்றச்சாட்டுகளையும் பொய்ப்பிரசாரங்களையும் இந்திய அரசு பலதடவைகள் எமக்கெதிராகச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (வி)